முருகப்பெருமான் துணை

**மகான் பதஞ்சலியார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.07.2023**, வியாழக்கிழமை

1. மனமே அடங்கு அமைதிபட
மனமே ஒடுங்கு ஞானம்பட
மனமாயை வென்று மீட்க
மாதவசி அரங்கன் கலியில்
2. கலியில் அவதாரம் நிகழ்த்தியிருக்க
கண்டுத்தொடர் வாழ்வினிலே
அழிவில்லா ஞானப் பாதை
அரங்கனால் அமையுமெனக் கூறி
3. கூறியே சோபகிருது நள்ளி திங்கள்
குறைவிலா லாபதிகதி குருவாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 11 ம் நாள், 27.07.2023, வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் வழி பதஞ்சலி யானும்
4. யானுரைக்க மனம் அடங்கிட
உணவுமுறை சைவ நெறியாக
ஞானவான்கள் நாமம்கூறி
நம்பிக்கையோடு நித்ய பூசைகள்
5. பூசைகள் செய்து வருவதுடன்
புண்ணிய வழியாம் அன்னதானமிட
ஆசைகள் கடந்து அரங்கன் வழி
அறிவிப்பேன் பொருளுதவி செய்து
6. செய்துமே தருமப் பணியை
சேவையாக உடல்உழைப்பாக
மெய்மைபட தந்து வருகவே
மேலான சரணாகதி குணம்

7. குணநலம் கூடி குருவழி
குறைகுற்றம் அனுகாதபடி
ஞானபலம் பெருகி மாற்றம்
நம்பிக்கை நன்னடத்தை ஆகி
8. ஆகியே குருவே வியக்க
ஆற்றலும் அமைதி கீர்த்தியும்
மிகைபட கண்டுத் தேறி
மேலானவர்கள் எனும் நிலை கூடி
9. கூடியே வானவ சக்திகள்
குருபரன் மேலான சக்திகள்
நாடிவந்து அருள் பொருள்வளம்
ஞானபலம் ஞானி ஆகும் வண்ணம்
10. வண்ணம் தேறி மாற்றம்
வருங்காலம் மாற்றும் சக்திகளாக
அண்ணல் அரங்கன் வடிவாகவே
அவரவரும் முழுமை அடைந்து
11. அடைந்து பிறவிப் பயனாக
அற்புதம் படைத்துச் சிறப்பர்
சோடைநீக்கி ஞான ஆட்சித்தருவர்
சொல்லிவந்த அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–